ப.திருமாவேலன்

ராஜா சர் அண்ணாமலை



வெங்கடகிரி மஹாராஜா



டெலப்ரோல் ஜமீன்தார்



ஓர் அரசாங்கத்தின் சாதனை என்பது என்ன? சப்பாத்தி போடுவதா, இட்லி போடுவதா, எங்கோ ஒரு தட்பவெப்ப நிலையில் வளர்ந்த ஆட்டை வாங்கிவந்து நம் தலையில் கட்டுவதா, வரிசையில் நின்று வாங்கிய வேகத்தில் சித்தூருக்குக் கொண்டுபோய் தெருவில் நின்று கூவி விற்கும் அளவுக்கு மோசமான கிரைண்டர், மிக்ஸி கொடுப்பதா, கட்சி மூலமாகச் செய்ய வேண்டியதை எல்லாம் ஆட்சி மூலமாகச் செய்துகொண்டு, 'ஊரான் வீட்டு நெய்யே; என் பொண்டாட்டி கையே!' என்று நடந்துகொள்வதா?

எது ஆட்சி? ஓர் ஆட்சி, எப்படி இருக்க வேண்டும்? இரட்டையாட்சி முறைப்படி சென்னை மாகாணத்தில் 1920-ல் நடந்த முதல் தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்த நீதிக் கட்சி நடத்தியதே, அதுதான் ஆட்சி. மாளிகையில் மன்னன் இருந்தாலும் மண் குடிசையில் மனசு இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர் கையில் ஆட்சி இருந்தால் அந்த ஆட்சி, காசு பார்ப்பதாக மட்டும் இல்லாமல் மக்கள் மாசு துடைப்பதாக அமையும்.

ஏழைகளைப் பற்றி அறிய ஏழையாகப் பிறந்திருக்க வேண்டும் என்பது அவசியம் அல்ல. ஒடுக்கப்பட்டவர்களது துன்பம் உணர ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்திருக்க வேண்டும் என்பது விதி அல்ல... 'ஒரு பெண்ணின் மனதை ஒரு பெண்தான் புரிந்துகொள்ள முடியும்' என்பதைப் போல பிற்போக்குவாதம் எதுவும் இல்லை. ஒரு பெண்ணின் ஆட்சியில் ஒரு பெண்ணே, அதுவும் டி.எஸ்.பி. அதிகாரத்தில் இருந்த பெண்ணே தற்கொலை செய்துகொண்டு செத்துப்போகும் தலையெழுத்து இருப்பதை எந்தக் கோயிலில் போய்ச் சொல்வது? வாழும் நிலத்தின் மணத்தையும் குணத்தையும் இதயத்துக்கும் மூளைக்கும் எவனொருவன் கொண்டு

ஊத்துக்குளி ஜமீன்தார்



சிங்கம்பட்டி ஜமீன்தார்



# பெரியோர்களே... தாய்மார்களே!

39

செல்கிறானோ அவனால்தான் எல்லார் துன்பங்களையும் உணர முடியும். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பாடியது வேப்ப மரம் அல்ல, வள்ளலார்தான். அருட்பெருஞ் ஜோதிக்கு மட்டும்தான் தனிப்பெரும் கருணை இருக்க வேண்டுமா என்ன? அது எல்லா ஆட்சியாளர்களுக்கும் இருக்க வேண்டியது.

நீதிக் கட்சியில் இருந்தவர்கள் ஏழைகள் அல்ல... அன்றாடச் சாப்பாட்டுக்கு அலைந்த கூலிகள் அல்ல... வறுமையின் வாசலைத் தொட்டவர்கள் அல்ல... நெசவுத் தொழிலும் தோல் பதனிடும் தொழிலும் வைத்திருந்து தனக்குச் சொந்தமான இடங்களைப் போய்ப் பார்க்க சாரட் வண்டியில் பயணப்பட்டவர் சர்.பிட்டி.தியாகராயர். தரவாட் மாதவன் நாயரும், நடேசனாரும் சொந்தக் காசை கட்சிக்குச் செலவழிக்கும் அளவுக்குப் புகழ்பெற்ற மருத்துவர்கள்.

அந்தக் கட்சியில் இருந்தவர்கள் எல்லாம் யார்? பனகல் ராஜா பி.ராமராய நிங்கார், பொப்பிலி ராஜா ராமகிருஷ்ண ரங்காராவ், வெங்கடகிரி மகாராஜா வேணுகோட்டி ஸ்ரீகோவிந்த கிருஷ்ணா யசேந்திரருல லாரு பகதூர், டெலப்ரோல் ஜமீன்தார் ராஜா ரங்காராவ், ஊத்துக்குளி ஜமீன்தார் எம்.ஆர்.காளிங்கராயர், சிங்கம்பட்டி ஜமீன்தார், செல்லம்பள்ளி ராஜா ஸ்ரீமந் ராஜா, ராமநாதபுரம் ராஜா ராஜேஸ்வர சேதிபதி என்கிற முத்துராமலிங்க சேதுபதி, சூனாம்பேடு ஜமீன்தார் சி.அருணாசல முதலியார், ராஜாசர் அண்ணாமலை செட்டியார், ராஜாசர் முத்தையா செட்டியார், விருதுநகர் வி.வி.ராமசாமி, ஆயக்குடி ஜமீன்தார், மீனாம்பள்ளி ஜமீன்தார் கே.சி.எம்.வெங்கடாசல ரெட்டியார்... என்று ஜமீன்தார்களும், ராஜாக்களும், நிலச்சுவான்தார்களும், பண்ணைகளும், பணக்காரர்களும் பங்கெடுத்த கட்சி, நீதிக் கட்சி. ஆட்சியில் உட்கார்ந்தவர்களும் இவர்கள்தான்.

அரசாங்க ஆவணங்களின் கிடங்கில் 1921 முதல் 1926 வரை நீதிக் கட்சி ஆட்சியால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை, சட்டங்களை, விதிமுறைகளை எடுத்துப் பார்த்தால் இந்தப் பணக்கார ஜமீன்தார்கள் எல்லாம் சேர்ந்து பாவப்பட்ட மக்களின் கோரிக்கைகளில் பலவற்றை நிறைவேற்றி இருப்பதை உணர முடியும்.

''தென்னிந்தியாவில் உள்ள ஒடுக்கப்பட்ட சமுதாயங்கள்

மீனாம்பள்ளி ஜமீன்தார்



செல்லம்பள்ளி ஜமீன்தார்



ஒவ்வொன்றும் கல்வி, சமூகவியல், பொருளியல், அரசியல், அறவாழ்வு ஆகிய துறைகளில் முன்னேற்றம் அடையச் செய்தலே நமது கட்சியின் லட்சியம்'' என்று டி.எம்.நாயர் போட்டுக்கொடுத்த பாதையில் பயணித்தது அந்தக் கட்சி. கல்வி,

இந்தத் தொடரின் ஆடியோ பதிவை www.vikatan.com மற்றும் soundcloud.com/vikatan-ல் கேட்கலாம்!

வேலைவாய்ப்பில் அனைத்துச் சமூகத்தினருக்கும் அவர்களது மக்கள்தொகை பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் சம வாய்ப்புத் தரப்பட வேண்டும் என்பதை நீதிக் கட்சி ஆட்சிதான் அமல்படுத்தியது. ஆனாலும் இது நீதிக் கட்சியின் கண்டுபிடிப்பு அல்ல.

1854-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ம் தேதி பிரிட்டிஷ் அரசு, சென்னை மாகாணத்தில் இருந்த மாவட்ட கலெக்டர்களுக்கு ஓர் உத்தரவைப் பிறப்பித்தது. அரசாங்கத்தில் வேலைக்கு ஆட்களை எடுக்கும்போது அனைத்துச் சாதியில் இருந்தும் பரவலாக எடுக்க வேண்டும் என்பதே அந்த உத்தரவின் மையக் கரு. உத்தரவு போட்டது பிரிட்டிஷ் அரசு. ஆனால், அதனை இங்கிருந்தவர்கள் அமல்படுத்தவிடாமல் தடுத்துக் கொண்டு இருந்தார்கள். இந்த ஆணையை உடைத்தது நீதிக் கட்சி ஆட்சி. 1921 செப்டம்பர் 21-ம் நாளும், 1922 மே 15-ம் நாளும் பிறப்பிக்கப்பட்ட வகுப்புரிமை தீர்மானங்களே அதுவரை அரசு நிர்வாகத்துக்குள் போகாமல் தடுக்கப்பட்டவர்களுக்கு வாசலைத் திறந்தது.

அந்தக் காலத்தில் கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கை என்பது அந்தந்த கல்லூரி முதல்வர்களின் விருப்பமாக இருந்தது. சாதி பார்த்து, நிறம் பார்த்து, உறவு பார்த்து, யாரையும் சேர்க்கலாம், தடுக்கலாம். முதன்முதலாக ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு தேர்வுக்குழு போட்டு அந்தக் குழுவே மாணவர்களைத் தேர்வு செய்யும் சட்டம் கொண்டு வந்ததும் நீதிக் கட்சிதான். மருத்துவம் முழுக்க முழுக்க ஐரோப்பியர் வசம் இருந்தது. அதில் இந்தியர்களைப் புகுத்தும் சட்டத்தை நீதிக் கட்சியே எடுத்து வந்தது. மருத்துவம் படிப்பவர்களுக்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற விநோதமான விதி இருந்தது. அதனை நீதிக் கட்சி நீக்கியது. சித்த மருத்துவத்துக்கு கல்வி நிலையம் உருவாக்கியதும் நீதிக் கட்சி ஆட்சியே.

சென்னை மாகாணத்தில் உள்ள அனைத்துத் தண்ணீர் எடுக்கும் கிணறுகளிலும் பொதுச் சத்திரத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பஞ்சமர்களுக்கும் உள்ள தடையை நீக்க வேண்டும் என்று பட்டியலின மக்களின் தலைவர் எம்.சி.ராஜா 1919-ல் தீர்மானம் கொண்டு வந்தபோது, அன்றைய உள்துறை அமைச்சர் சர் சைக்ஸ் தோதுண்டா மறுத்தார். 'இதில் அரசாங்கம் எதுவும் செய்ய முடியாது' என்று கை விரித்தார். 'மத விவகாரங்களில் நாங்கள் தலையிட முடியாது' என்று கவர்னர் வில்லிங்டன் தட்டிக் கழித்தார். இதே